அ.வ.எண்.28/2020 நாள்: 12.02.2026

வா.சா. 1 திரு.முருகானந்தம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பூர்வீக இடத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் அயிட்ட தாவா சொத்தின் நான்கெல்லை என்ன என்றால் 76/28 சித்தி விநாயகர் கோவிலுக்கு கிழக்கு, வடிவேல் முப்பனார் நிலத்திற்கு மேற்கு, மகாலிங்கம் மூப்பனார் நிலத்திற்கு வடக்கு, கண்ணுசாமி மூப்பனார் நிலத்திற்கு தெற்கு. 2-வது அயிட்ட தாவா சொத்தின் நான்கெல்லை என்ன என்றால் கிழக்கில் ரோடு, மேற்கில் அர்ச்சுனன் நிலம், வடக்கில் மகாலிங்கம் மூப்பனார் நிலம். தெற்கில் மோகன் நிலம் உள்ளது.

2) பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன கட்சி எடுத்துள்ளார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை.எனது அப்பா பெயர் என்ன என்றால் சுப்பிரமணியன் ஆகும். எனது தகப்பனார் 13.08.1997 ல் 1 வது அயிட்ட சொத்தை 1-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு கிரையம் செய்துக் கொடுக்கவில்லை. 2-வது அயிட்ட சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பிறகும் அந்த 2 வது அயிட்ட சொத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் 2 வது அயிட்டத்திலும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்துள்ளதால் அதை நீக்க வேண்டிய அவசியமில்லை.

3) 2 வது அயிட்ட சொத்தில் வீடு உள்ளதா என்றால் முன்பு இருந்தது இப்பொழுது இல்லை. 2-வது அயிட்ட சொத்து உள்ள பகுதி தெரு என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்தானது தோட்டம் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்து வீடு என தெரிந்து முதல் அயிட்ட சொத்திற்கு வழக்கு போடுவதற்காக 2 வது அயிட்ட சொத்தையும் வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சரியல்ல, எல்லை கற்களை பிடிங்கியதால்

வழக்கில் சேர்த்துள்ளேன். பிரதிவாதிகள் எல்லை கற்களை பிடிங்கினார்கள் என்று வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். முதல் இன சொத்தை அபகரிக்க முயற்சிக்கிறார்கள் என்று புகார் கொடுப்பதற்கு 2வது அயிட்ட சொத்தின் கல்லை பிடிங்கியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.7 ல் முதல் அயிட்ட சொத்தை பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா போலியாக பத்திரம் எழுதிக் கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு என்ன வயது என்றால் 55 ஆகும். எனது தகப்பனார் 13.08.1997 அன்று முதல் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தலிருந்து தற்போது வரை 28 வருடங்களுக்கு மேலாக இருக்கும் என்றால் இருக்கும். மேற்படி பத்திரம் எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த விவரம் நாங்கள் மேஜரான பின்பு தெரிந்து நாங்கள் நடவடிக்கை எதாவது எடுத்தோமா என்றால் எனக்கு தற்போதுதான் தெரியும். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தில் என்ன என்ன உள்ளது என்று குறிப்பிட்டுள்ள விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5. எனக்கு 20 வயது ஆகும் போது எங்கு என்ன வேலை பார்த்தேன் என்றால் கரூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். எனக்கு நிரந்தர குடியிருப்பு என்ன என்றால் 2/122 தாழக்குடி, திட்டை போஸ்ட், வெண்ணாற்றங்கரை வழி, தஞ்சாவூர் மாவட்டம் ஆகும். மேற்படி நிரந்தர குடியிருப்பு பகுதிக்கு வந்து செல்வேனா என்றால் ஆமாம். மற்ற 2 வாதிகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் 2-ம் வாதி அறிவழகன் கரந்தையிலும், 3-ம் வாதி வெற்றிச்செல்வன் விருதுநகரிலும் வசிக்கிறார்கள். 1வது அயிட்ட சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்படவில்லை என்ற ஒரே காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்திற்கு சென்ற பிறகு உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்ற காரணத்தினால்தான் மேற்படி மனுவினை வாபஸ் பெற்றுக் கொண்டோமா என்றால் இல்லை.

6. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. 28.10.2019 ல் 2, 3 பிரதிவாதிகளுக்கு

எதிராக தஞ்சாவூர் தாலுக்கா காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு இன்று வரை விசாரணையில் உள்ளதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்ன விசாரணையில் உள்ளது என்றால் புகார் கொடுத்த நிலையிலேயே உள்ளது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

S.d/ Muruganantham

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.12 16:01:43 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU